**36 இரசவாதம் செய்த படலம்**

பாண்டிய நாட்டில் சிறந்த சிவதலமாகிய திருப்பூவணத்தில் பொன்னனையாள் என்ற மங்கை சிவ தொண்டு புரிந்து வந்தாள். அழகிய வடிவம் கொண்ட அவள் ஆடல் பாடல்களில் வல்லவளாக இருந்தாள். அவள் தினந்தோறும் நீராடி சிவனை பூஜித்து, கோயில் சென்று கோயிலை சுத்தம்செய்து, சிவனடியார்களுக்கு உணவளித்தப் பின் தான் உணவருந்தி வந்தாள்.

அவளின்அன்பைஉலகத்தாருக்குஅறிவிக்கஎண்ணம்கொண்டஐயன் அவள் உள்ளத்தில் தங்கத்திலான் ஐயனின் திருவுருவத்தை உருவாக்கும் ஆசையை புகுத்தினார். ஆடல், பாடல்களில் மூலம் வரும் வருவாய் அனைத்தையும் அடியார்களின் தொண்டிற்கேபயன்படுத்தியதால் பெருமானின் திருவடிவத்தை உருவாக்க பொருள் அவளிடத்தில் இல்லை. இதனால் வருத்தமுற்ற பொன்னனையாள் தனக்கு அருளுமாரு ஐயனை வேண்டியனாள்.

ஒரு நாள் சிவபெருமான் அடியார்களது கூட்டத்தில் சித்தர் ஒருவராய் பொன்னனையாள் இல்லம்வந்து உணவருந்தாமல் தனியாக வீற்றிருந்தார். தாதிகள் அதை உணர்ந்து அவரை உணவருந்த அழைத்தனர். அதற்கு மறுத்த சித்தர் அவர்களின் தலைவியானபொன்னனையாளை அவரிடம் அழைத்து வருமாறு கூறினார். தாதிகள் இதனைபொன்னனையாளிடம் கூறினர். அவள் உடனே சித்தரிடம் சென்று வணங்கி, அவரது திருவுள்ளம்படி தொண்டு புரிவதாகக் கூறி உள்ளே வரும் படி வேண்டினாள். ஐயன் மனத்துள் நகைத்து, பேரழகுடைய அவள் இளைத்திருக்கும் காரணம் கேட்டார். அதற்கு அவள்தனதுஆசையைக்கூறி, அவள் பொருள்கள் எல்லாம் சிவனடியார்களின் தொண்டிற்கே செலவாகி விடுவதால், தன் எண்ணம் நிறைவேற எனவும், அதனால் அவள் இளைத்ததாக கூறினாள்.

உடனே சித்தர் சிறுவயதிலேயே வாழ்வில் இளமையும் செல்வமும் நிலையற்றவை என்பதை உணர்ந்து, சிவனை வழிபட்டு, சிவ தொண்டு செய்தமையால் அவள் இம்மைப் பயனையும்மறுமைப் பயனையும் பெற்று விட்டதாக கூறினார். மேலும் அழிவில்லாத ஐயனின் திருவுருவைஅவள் செய்வாள் என உறுதி கூறி, வீட்டிலுள்ள பித்தளைப் பாத்திரங்களைக் கொண்டு வரச்சொன்னார். அவற்றின் மீது சித்தர் திருநீற்றை தூவி அவையாவும் பொன்னாகுக என தியானித்துபொன்னனையாளிடம் அன்றிரவு இவை அனைத்தையும் நெருப்பிலிட்டால் அவை பொன்னாக மாறும் என்றும் அவற்றைக் கொண்டு ஐயனின் திருவுருவை அவள் வடியமைக்குமாறு கூறி யருளினார்.

இரவு அங்கேயே தங்கிகாரியத்தை முடித்துத் தர வேண்டிய பொன்னனையாளிடம் தான் மதுரைத் சித்தர் எனக் கூறி மறைந்தருளினார். பொன்னனையாளும்அவர்கூறியபடிசெய்ய, பாத்திரங்கள் அனைத்தும் ஐயன் கூறியது போல் பொன்னாயிற்று. அந்த பொன்னால் ஐயன் திருவடிவம் அமைத்து பிரதிஷ்டைசெய்தாள். சில காலத்திற்கு பின் சிவபதம் அடைந்தாள்.

**பல்லவி**

திருபுவணத்துக் கணிகை பொன்னனையாள்
திருவுருவம் பொன்னால் அமைத்திட ஆணைக்கொண்டள்

**அனுபல்லவி**

வருவாய் அனைத்தும் உந்தன் வழிபாட்டிற்கே செல
வானதால் விருப்பம் நிறைவேறாமல் மெலிந்தாள்

**சரணம்**

சித்தனாய் வந்து அத்தனைப் பாத்திரத்தையும்
அன்றிரவே அனலிலிட்டால் வேண்டிய பொன் கிடைக்கு மென்றாய்
மொத்த பொன்னைக் கொண்டமைத்த மோகன வடிவைக் கண்டு
முத்தமிட்டு மும்முறை பிரதட்சணம் செய்தாய்